**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No.88/2017**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 8 |
| Name | : Tr. Rajendran |
| Father's Name | : Ramasamy Raji |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2020.

**முதல் விசாரணை.**

நான் 31.05.2015 ம் தேதி சிட்லபாக்கம் பேரூராட்சியில் எழுத்தராக பணி செய்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். 2002 ல் சிட்லபாக்கம் பேரூராட்சியின் பொறியாளர் மற்றும் அதிகாரிகள் ஆக்ரமிப்பு செயப்பட்டள்ள இடம் சர்வே எண்.189/1ஜெ கால்வாய் கட்ட 1000 சதுரடி மழைநீர் கால்வாய்ற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கால்வாய் பணி மேற்கொள்ளும் பொழுது நடராஜன் என்பவர் மேற்படி இடமானது எனக்கு சொந்தமானது என்றும் இது தொடர்பாக தாம்பரம் நீதிமன்றத்தில் 20/2002 ல் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு தொடர்பாக 18.01.2005 ல் பேரூராட்சி செயல் அலுவலரின் நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை கொடுத்ததன் பேரில் நான் நேரில் சென்று வழக்கு சம்மந்தமாக விவரங்களை தெரிந்ததை தொடர்ந்து 2011 ல் பேரூராட்சிக்கு சாதகமாக வழக்கு தீர்ப்பு ஆனது. அதனை தொடர்ந்து பேரூராட்சி மூலம் 2012 ல் மேற்கண்ட இடமானது பேரூராட்சிக்கு சொந்தமான இடம் என்று பெயர் பலகை அமைக்கப்பட்டு பேரூராட்சிக்கு சொந்தமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனை எதிர்த்து திரு. நடராஜன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கும் பேரூராட்சிக்கு சாதகமாக அமைந்தது. இதனை தொடர்ந்து தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகம் மூலமாகவும் பேரூராட்சி அலுவலகம் மூலமாகவும் உத்தரவு இடப்பட்டு கால்வாய் அமைக்கப்பட்டது. என்னை சிபிசிஐடி போலிசார் விசாரணை செய்தார்கள்.

**ஏ2, ஏ3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் சிபிசிஐடி போலிசார் வற்புறுத்தலின் பேரில் தவறாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxx
Judicial Magistrate No.I,
Chengalpattu.

## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.88/2017

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 9 |
| Name | : Senthamarai Kannan |
| Father's Name | : Selvam |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.12.2020.

**முதல் விசாரணை.**

நான் தற்பொழுது வருவாய் நிர்வாகம் பேரிடர் மேலாண்மை கண்காணிப்பாளர் நிலையில், மதுராந்தகம் வட்டம் கள்ளபிரான்புரம் கிராமத்தில் உள்ள வடிப்பகத்தில் துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 08.08.2014 முதல் 16.03.2015 முற்பகல் வரை தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பயிற்சி வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தேன். என்னை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் சிட்லபாக்கம் கிராமம் புலஎண் 189/1, 189/1ஜெ நடராஜன் சொத்து சம்மந்தமாக விசாரணை செய்வதற்காக எஸ்.ஏ. 479/2012 ல் நீதிமன்ற சாட்சி ஒன்றாக என்னை விசாரித்தார்கள். நான் அது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் 06.03.2015, 10.03.2015, 11.03.2015 ல் சாட்சியம் அளித்தேன். மேலே கண்ட புலஎண்கள் முன்னால் ஒருங்கிணைந்த சோளிங்கர் தாம்பரம் வட்டத்தில் இருந்தது. பட்டா மாறுதல் பதிவேடுகளின்படி இப்புல எண்களுக்கு 3224/2000 மற்றும் 3362/2000 ஆர்பிடி எண் வழங்கப்பட்டிருந்தது. ஆவணங்களை பரிசீலித்ததில் பிரிவுபட்ட தாலுக்காக்களில் அந்த ஆர்பிடி எண்கள் பள்ளிக்கரணை கிராமத்திலும், மற்றொன்று மடிப்பாக்கம் 2 கிராமத்து பதிவேடுகளில் காணப்பட்டிருந்தது. அதனை வைத்து சரிபார்த்த பொழுது சிட்லபாக்கம் கிராமத்தில் இந்த ஆர்பிடி எண் பதிவு செய்யப்பட்ட விவரம் இல்லை. ஆகையால்

வழங்கப்பட்ட பட்டா நடைமுறைபடி வழங்கப்படவில்லை என்றும் போலியாக வழங்கப்பட்டுள்ளது என்றும் நான் கூறினேன். அந்த பட்டாவானது நடராஜன் என்பவர் பெயரில் வழங்கப்பட்டிருந்தது. அந்த நிலங்களின் மொத்த விஸ்தீரணம் ஆக்ரமிப்பு செய்யப்பட்ட 1000 சதுரடி ரோடு போக பிளாட் எண் 28 ல் 1143 சதுரடி நிலம் இருக்கலாம். என்னை சிபிசிஐடி போலிசார் 02.04.2016 அன்று காஞ்சிபுரம் அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள். எதிரி நடராஜன் என்பவருக்கு சிட்லபாக்கம் பேரூராட்சி, காமராஜர் காலனியில் உள்ளது.

**1 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பட்டாக்களின் நிலங்களின் வகைப்பாடுகளை கூறமுடியுமா என்றால் ஒரு பட்டாவில் சம்மந்தப்பட்ட இடம் பிளாட் போடப்பட்ட இடமாகும். மற்றொரு இடம் வடக்கே உள்ளது ரோடாகும். புல எண் 189/1ஜெ யில் கண்ட இடம் ரோடாகும். அந்த இடங்களை பிளாட்டாக அங்கீகரத்து பெற்றார்களா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. தாவா இடங்கள் கமர்சியல் பிரின்ஸ் கூட்டுறவு சங்கத்தினால் 1981 ல் பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டு போடப்பட்ட இடங்கள் என்றால் எனக்கு அதுகுறித்து தெரியாது. பிளாட் போடுவதற்கு முன்பு இடம் தனியாருக்கு சொந்தமானதா அல்லது அரசாங்கத்திற்கு சொந்தமானதா என்று எனக்கு தெரியாது. பிளாட் போடுவதற்கு முன்பு அந்த இடங்கள் எந்த வகைப்பாட்டில் இருந்தன என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 1000 சதுரடி நிலம் சாலை என்று கூறுவதற்கு என்ன ஆதாரம் வைத்திருந்தேன் என்றால் அந்த நிலத்திற்கு உள்ள புலவரைபடத்தை பார்த்து கூறினேன். எப்எம்பி வரைபடத்தில் எப்பொழுது சாலையென்று குறிப்பிடப்பட்டது கூறமுடியுமா என்றால் எப்எம்பி ஸ்கெட்ச் எப்பொழுது வரையப்பட்டது என்று எனக்கு தெரியாது. பட்டா, சிட்டா, அடங்கல் போன்ற ஆவணங்கள் பார்த்து தான் கூறினேன். பட்டா என்பது நில உரிமை ஆவணமாகும். சிட்டா என்பதும் நில உரிமை ஆவணமாகும். அடங்கல் கிராம நிர்வாக அலுவலரால் பராமரிக்கப்படும் அனுபவ ஆவணமாகும். நான் பட்டா, சிட்டா, அடங்கல் ஆவணங்களை நன்கு பரிசீலித்து உரிமையாளர் ஆவணங்களை தெரிந்து கொண்டேனா என்றால் நான் பார்த்தேன். ஆனால் அதுபற்றி தெரிந்து கொள்ளவில்லை. ஆர்பிடி எண்ணை மட்டுமே சரிபார்த்தேன். தாவா புல எண்கள் தனி நபரால் வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டு சாலை அமைக்கப்பட்டு ஊராட்சி நிர்வாகத்திற்கு தானம் எதுவும் கொடுக்கப்பட்ட ஆவணங்கள் ஏதாவது பார்த்தேனா என்றால் இல்லை. புல அளவை பதிவேடு அவ்வப்போது நிலத்தில் மாற்றங்கள் செய்யப்படும் போது மாற்றி வரையப்படும் என்றால் சரிதான். அதுபோல் இந்த சாலை எப்பொழுது மாற்றப்பட்டது என்ற விவரத்தை நான் தெரிந்து கொள்ளவில்லை. நான் கூறிய 1000 சதுரடி சாலையானது உள்ளாட்சி நிர்வாகத்திற்கு பாத்தியப்பட்டது என்று காட்டக்கூடிய ஆவணம்

என்றும் நான் பரிசீலித்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆர்பிடி எண் 3224/2000 என்பது பள்ளிக்கரணை சம்மந்தப்பட்ட இடமாகும். அந்த ஆர்பிடி எண்ணானது புல எண் 189/1ஜெ க்கு கொடுக்கப்பட்டது. அது தான் சாலையாகும். அந்த ஆவணத்தை தாம்பரம் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வழங்கியுள்ளார். அந்த ஆவணத்தை வழங்கிய போது அந்த பதவியில் இருந்தவர் பெயர் சுவாமிநாதன் ஆகும். 3326/2000 ஆர்பிடி நம்பரில் உள்ள ஆவணத்தை வழங்கிய அதிகாரி யார் என்ற விவரம் தெரியாது. அந்த கையெழுத்து செய்தவர் யாரென்று தெரியாது. தலைமையிடத்து துணை வட்டாட்சியராக சுவாமிநாதன் என்பவர் இருந்தார். இந்த இரண்டு ஆர்பிடி நம்பர்களும் போலியானதாகும். அந்த பட்டாக்களை வழங்கியது யாரென்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. அதிலுள்ள கையெழுத்து உண்மையா, பொய்யா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் இந்த ஆர்பிடி எண்கள் உண்மையான பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அதுபோன்ற ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் நான் ஆர்பிடி ரிஜிஸ்டரின் நகலை ஐகோர்டில் தாக்கல் செய்தேன். நான் கூறிய ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் கூறிய ஆர்பிடி நம்பர்களில் தந்துள்ள உண்மை உரிமையாளர்களின் பெயர்களை நீதிமன்றத்தில் கூறியுள்ளேனா என்றால் சென்னை உயர்நீதிமன்றத்தில் கூறினேன். பள்ளிக்கரணை நிலமானது சீனிவாசன் என்பவர் பெயரிலும், மடிப்பாக்கம் 2 நிலமானது ரவிக்குமார் என்பவரின் பெயரிலும் ஆர்பிடி பதிவேட்டில் உள்ளது. நான் இந்த ஆவணத்தை போலி என்று எதனடிப்படையில் கூறினேன் என்றால் ஆர்பிடி பதிவேடுகளின் அடிப்படையில் கூறினேன். மற்ற ஆவணங்களை நான் பார்க்கவில்லை. எப்எம்பி மட்டும் பார்த்தேன். அதில் ரோடு என்று இருந்தது. நான் வேறு உரிமை ஆவணங்களை எதையும் பார்க்கவில்லை. நான் என்னை போலிஸ் விசாரித்த பொழுது சீனிவாசன் மற்றும் ரவிக்குமார் பெயரில் அந்த ஆவணங்கள் இருந்தது என்று நான் கூறினேனா என்றால் இல்லை. அந்த இருவரின் பெயர்கள் ஆர்பிடி ரிஜிஸ்டரில் பதிந்திருந்ததை வைத்து மட்டும் பார்த்து தான் கூறினேன். போலியென குறிப்பிட்ட ஆவணத்தை யார் வழங்கினார்கள் என்று தெரிந்து கொள்ள நான் எந்த முயற்சியும் எடுத்தேனா என்றால் இல்லை. நான் ஒரு ஆவணத்தை போலியென எவ்வித நடைமுறையும் பின்பற்றாமல் கூறுகிறேன் என்றால் சரியல்ல. கீழமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட உரிமையியல் வழக்கு 20/2002 பற்றி எனக்கு தெரியாது. அந்தவழக்கில் ராஜேந்திரன், தணிகைநாதன் ஆகியோர்கள் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. தாம்பரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பட்டாக்களை போலியானது என்று கூறி எவ்வித ஆட்சேபனையும் எப்பொழுதும் செய்யப்படவில்லை

என்றும் அவ்வாறு இருக்கையில் நான் தவறாக போலி ஆவணம் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. அந்த இடம் உள்ளாட்சி துறைக்கு பாத்தியப்பட்டது என்று காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் கிடையாது என்றும் நான் அரசிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கின் மீது அரசிற்கு எவ்வித உரிமையும் இல்லாத போது இவ்வழக்கு முகாந்திரம் இல்லாதது என்றால் சரியல்ல. எதிரி பட்டாவினை முறைபேடு கிரையம் பெற்ற ஆவணத்தினை பெற்றார் என்றும் அவர் பொய்யான ஆவணம் பெறவேண்டிய அவசியம் எதுவும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அதசாஆ 3, 4 பட்டாக்கள் ஆவணங்களை வருவாய் துறையினரால் முறையாக பரிசீலிக்கப்பட்டு வழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அந்த பட்டாவின் அடிப்படையில் வரிகட்டி வரும் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதிகாரிகளின் வேண்டுகோளின் அடிப்படையில் தவறான அறிக்கை கொடுத்து தவறாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த இரு ஆவணங்களும் முறையாக கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேலதிகாரிகளின் வற்புறுத்தலுக்கு இணங்க அந்த ஆவணத்தை வழங்கிய அதிகாரியை காப்பாற்றுவதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அதனால் தான் அந்த ஆவணங்களை வழங்கிய அதிகாரிகளை விசாரித்து உண்மை தன்மை அறிய முயற்சிக்கவில்லையென்றால் அதற்கான அதிகாரம் எனக்கில்லை. அந்த அதிகாரிகளின் மீது எந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரிய வந்ததா என்றால் இல்லை.

மற்ற எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென எடுத்துரைக்கப்பட்டது.

**மறு விசாரணை.** இல்லை.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxx
Judicial Magistrate No.I,
Chengalpattu.